RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2513

OPEN ACCESS

# பழந்தமிழரின் பழக்க வழக்க மற்றும் நம்பிக்கை சார் பண்பாடு

வெ. ஜெயமாலா [அ, *], சே. செந்தமிழ்ப்பாவை [அ]

[அ] தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா

# Customs and Beliefs of Ancient Tamil People

V. Jayamala [a, *], S. Senthamizhpavai [a]

[a] Department of Tamil, Alagappa University, Karaikkudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: rajannaga138@gmail.com

Received: 29-07-2022
Revised: 23-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Many beliefs prevail among primitive races. Many of those beliefs have reached the Sangam period and are qstill alive today. Habits are the necessity of human society. Inheritance is the process by which individual habits are adopted by groups of people in association with time and becomes routine, tradition is something that comes naturally from psychological homogeneity, and habit is a learned process. The old proverb says that thehabit is essential for development. The continuation of the habit is a kind of development and the custom is a social one. The custom is formed by morals and actions, that is, the habitual action is the habit. In this way, the aim of this article is to explain about the custom and belief found in Ettuthogai anthology.

**Keywords:** Human Society, Development, Tamil People, Beliefs

## பழக்க வழக்கம் சொற்பொருள் விளக்கம்

“பழக்க வழக்கம் என்ற சொல்லுக்கு தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் செயல்முறை” நடைமுறை எனத் தற்காலத் தமிழ் அகராதியும் பழக்கம் என்ற சொல்லுக்கு “அறிமுறகம், பயிற்சி வழக்கம், ஒழுக்கம், அமைதி” எனக் கழகத் தமிழ் அகராதியும் பொருள் தருகின்றன.

“பழக்கம் என்ற சொல் பழகுதல் அல்லது பயிற்சியாதல் என்ற பொருளில் தமிழ் இலக்கியத்தில் பண்டு தொட்டே ஆட்சி பெற்று வந்துள்ளது. வழக்கம் என்ற சொல் சமுதாயம் ஏற்றுக் கொண்ட பழக்கங்களைக் குறிப்பதற்காகப் பயன்பட்ட வளர்ச்சிநிலை தோன்றி சொல்லாகக் கருதக்கது” -என்பர் க.காந்தி (Gandhi, 2008).

“பழக்கம் என்பது பயிற்சியில் முதிர்ச்சி எனப் பொருள்படும். நாம் முன்னோர் தத்தம் பெருமுயற்சியால் வருந்திப் பயின்று தேறிய பழக்கங்கள் காலப்போக்கில் வழக்கமாக மாறுகின்றன” என மா.இரசாமாணிக்கனார் பழக்கம் வழக்கம் என்பதற்கு பொருள் தருகின்றார் (Rasamanikkanar, 2008).

## கார்த்திகை தீபம்

கார்த்திகைத் திருவிளக்கு விழா பழங்காலம் முதல் தமிழரிடையே இருந்து வந்துள்ளது.

“நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட

தலைநாள் விளக்கின் தகையுடையவாகிப்

புலமெலாம் பூத்தன் தோன்றி சிலமொழி

தூதொடு வந்த மழை"

என்னும் பாடலின் மூலம் கார்த்திகைத் திருநாளில் நிரையாக விளக்கிட்டு விழா எடுக்கும் வழக்கத்தை அறிய இயலும். இன்றும் கார்த்திகைத் திங்களில் முப்பது நாட்களும் தமிழர்கள் தங்கள் வீடுகளின் வாசலில் கோலமிட்டு விளக்கேற்றி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## விளையாட்டு

பழங்காலம் தொட்டு தற்காலம் வரை வழக்கில் உள்ள மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று சிற்றில் இழைத்தலாகும்.

"சிற்றில் என்பதற்குச் சிறுகுடியில் சிறுமியர் கட்டி விளையாடும் மணல் வீடு" என்று திருமகள் அகராதியும் 'சிறுவீடு' என்று கழகத் தமிழ் அகராதியும் சிறுமி மாரிழைத்த மணல் வீட்டைச் சிதைத்தாடும் ஆண் மகன் விளையாட்டு என மதுரைத் தமிழ் பேரகராதியும் பொருள் தருகின்றன.

மகளிர் சிற்றில் அமைத்து விளையாடியதை மூன்று பாடல்கள் குறிப்பிடுகின்றன. தலைவன் இற்செறித்த காரணத்தினால் கண்ணீருடன் நின்ற தலைவியைக் கண்ட செவிலித்தாய் காரணத்தை வினவி

"கடல் வந்தென்

வண்டல் சிதைத்த (து) என்றேன்"

என்பாள். இதில் தலைவி கடலில் உள்ள மண்ணை வைத்து சிற்றில் அமைத்து விளையாடியதை அறியலாம் மேலும்,

"ஓதம் தொகுத்த ஒலிகடல் திண்முத்தம்

போதை மடவார்தம் வண்டல் விளக்கயரும்

காணலஞ் சேர்ப்ப"

என்னும் பாடல் வரிகளின் மூலம் கடற்கரையில் உள்ள மண்ணைக் கொண்டு மகளிர் வீடு கட்டியும், அவ்வீட்டை அலங்கரிக்கும் முகமாக கடல் அலைகளால் கொண்டு வரப்பட்ட விளைந்த குளிர்ந்த முத்துக்களை விளக்குகளாக வைத்தும் விளையாடினர். தலைவன், தலைவியை அழைத்து உடன் செல்லும் போது அவளுடைய வருத்தத்தைப் போக்குவதற்காக வண்டல் மணலில் சிறிது நேரம் விளையாடும்படி கூறுகிறான்.

"பொன் நோக்கம்

கொண்ட சுணங்கணி மென்முலைக்கொம் பன்னாய்

வண்டல் அயர்மணல் மேல் வற்று"

என்னும் பாடல் புலப்படுத்தும்.

## நம்பிக்கை பற்றி அறிஞர்கள் கருத்து

நம்பிக்கை மனித வாழ்வில் முதன்மை பெறுகின்றது. நம்பிக்கை என்பதற்கு 'சத்தியம் நிசம் விசுவாசம்"5 என்று மதுரைத் தமிழ் பேரகராதியும் 'அனுபவம் ஏற்படுத்தும் உறுதி"6 எனத் தற்காலத் தமிழ் அகராதியும் பொருள் தருகின்றன. நம்பு என்னும் சொல்லிலிருந்து பிறந்தது நம்பிக்கையாகும்.

நம்பிக்கை பற்றி "இயற்கையின் புதிரான செல்களை உணர இயலாத போதும் மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனிதமனம் சிலவற்றைப் படைத்துக்

காரணம் கற்பித்துக் கொள்கின்றது. அவை நம்பிக்கைகளாக உருப்பெருகின்றன” என்பர் கா.காந்தி (Gandhi, 2008).

“அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புகளோடு இயைந்து நோக்கிய போது நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன” (Gandhi, 2008).

அகஇலக்கியங்களில் நம்பிக்கைகள் களவு, கற்பு என்னும் இரு வாழ்வியல் நிலையிலும் காணக்கிடக்கின்றன. 1. கூடல் இழைத்தல், 2. கண் துடித்தல், 3. பல்லி ஒலி எழுப்புதல், 4. நல்ல நாள் பார்த்தல், 5. வெறியாட்டு, 6. பேய் பற்றிய நம்பிக்கைகள் என்பன போன்றவை குறிப்பிடத்தக்கன.

## கூடல் இழைத்தல்

கூடல் இழைத்தல் என்பதற்குப் பழைய இலக்கியங்கள் ஆயிழைத்தல் எனக் கூறுகின்றன. மேலும் கூடற்குறி என்றும் கூடற்சூழி வரைதல் என்றும் சுட்டப்பெறுகிறது. இது தலைமகன் பிரிந்தவழித் தலைவனை எதிர்நோக்கித் தானே குறிப்பார்க்கும் ஒரு குறி முறையாகும். இக்குறி முறையைப் பற்றி ஒன்று ஒரு வட்டத்தினை வரைந்து அந்த வட்டத்தில் பல வட்டங்களை வரைந்து மனத்தில் பல வட்டங்களை வரைந்து தோன்றும் எண்ணிக்கையை வைத்து குறிப்பார்க்கும் முறை மற்றொன்று கண்களை மூடிக்கொண்டு தரையில் வட்டமிடுவது இரண்டு முனையும் சேர்ந்தால் நினைத்தது நடக்கும் எனவும், சேராமல் இருந்தால் நடக்காது என்ற குறிமுறை” என்பர் (Gandhi, 2008).

இதில் முதலில் சொல்லப்பட்ட முறையே ஐந்திணை ஐம்பதில் இடம் பெற்றுள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவி தலைவன் மீண்டும் தன்னை வந்து சேர்வானா என்பதை அறிவதற்காக பெரும் வட்டமாக ஒரு கோட்டைக் கீறி அதற்குள்ளே சிறு சூழிகள் பலவற்றை நிறையச் சுழித்து முடித்து பின் அச்சுழிகளை எண்ணும் போது ஒற்றைப்படையில் எண் அமைந்தால் தலைவன் விரைவில் கூடான் என்றும், இரட்டைப்படையில் அமைந்தால் விரைவில் கூடுவான் என்றும் கருதிட வட்டமிடுகிறாள். தலைவியின் இத்தகைய நம்பிக்கையை,

“பொரிப்பறப் பல்லிச் சினையீன்ற புன்னை

வரிப்பற வார்மணல் மேல் ஏறித்-தெரிப்புறத்

தாழ்கடல் தண் சேர்ப்பன் தார் அகலம் நல்குமே

ஆழியால் காணாமோ யாம்”

என்னும் பாடல் விளக்கும் இதன் வழி மகளிர் தங்கள் மனிதல் நினைத்த காரியம் நடக்குமா, இல்லையா என அறிவற்கு கூடல் இழைத்தல் என்ற செயலை மேற்கொண்டுள்ளனர் என்பது புலனாகும்.

## கண் துடித்தல்

கண் துடித்தல் பற்றி நம்பிக்கையைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நல்லது. வலது கண் துடித்தால் தீமை என்றும், ஆண்களக்கு வலது கண் துடித்தால் நன்மை. இடது கண் துடித்தால் தீமை என்றும் நம்பினர் தோழி, தலைவியிடம் பாலைநிலை வரியாகப் பொருள் தேடச் சென்ற நம் தலைவன் இன்றே வருவார். எங்ஙனமெனில் எனது இடக்கண் துடிக்கின்றது. எனவே நீ துன்புறாது இருப்பாயாக என்கிறாள். இதன்வழி அவரவர் கண்துடிப்பு மட்டுமின்றி நெருங்கிய தொடர்புடையார் மாட்டு ஏற்படும் நிகழ்வும் கூட நம்பிக்கையாகக் கொள்ளப்பட்டமை புலனாகும்.

## பல்லி ஒலி எழுப்புதல்

பல்லி ஒலித்தலைச் சகுனமாகக் கருதுவது சங்ககாலந்தொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது. பல்லி ஒலிக்கும் இடத்தை வைத்து அது நன்நிமித்தமா தீ நிமித்தமா என்பதைக் கணித்துள்ளனர். 'மாந்தர் வாய் பிறக்கும் நற்சொல் கேட்பது போலவே பல்லி சொல்லும் சொல்லையும் நிமித்தமாகக் கருதினர்" என்பர் மு. சண்முகம் பிள்ளை (Sanmugam Pillai, 2008).

"வெஞ்சுரம் சென்றார் வரக்கண்டு

வாய்மாண்ட பல்லி படும்"

என்பதில் பிரிந்து சென்ற தலைவன் வருவான் என்பதைப் பல்லியின் ஒலி கொண்டு தோழி தலைவியைத் தேற்றுகின்றாள். இதில் பல்லி ஓசையெழுப்புதல் நன்நிமித்தமாக விரைவில் தலைவன் வருவான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நல்லநாள் பார்த்தல்

எந்த ஒரு செயலைச் செய்வதற்கு முன்பும் நல்லநாள் சட்சத்திரம் பார்த்தல் என்பத தமிழரின் வழக்கமாகும். 'நாள் செய்வதை நல்லவர் செய்யார்" என்பது பழமொழி தான் செய்யும் செயல் வெற்றியோடு முடிய வேண்டும் எனில் நல்ல நாளிலும், நல்ல வேளையிலும் செய்ய வேண்டும் என்று மக்கள் நம்பினர். இங்ஙனம் நல்லநாள் பார்த்து திருமணம் நடத்துவதை,

"ஓரில் ஓர்

கோள்நாடல் வேண்டா குறியறிவார்க் கூஉரக் கொண்டேன்

நாள் நாடி நல்குதல் நன்று"

என்னும் பாடல் விளக்கும். இதில் தோழி தலைவனிடம் நிமித்தம் பார்க்கும் கணிகளை அழைத்து நல்ல மணநாளைப் பார்த்து நீ இவளை மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று உரைக்கின்றாள். இதன் வழி நல்லநாளில் மணம் முடிக்க வேண்டும் என்ற நம்பிக்கை இருந்ததை அறிய இயலும்.

## வெறியாட்டு

தமிழர்கள் வழிபாட்டு முறையில் மிகவும் பழமையானது வெறியாட்டு என்பதாகும். மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்து உருவானதே இது. ஆவேசம் என்று இதனைக் கூறுவர். இன்றும் கோயில் பூசாரிகள் சாமியாடி வருவதுரைத்தலைக் காணலாம். சங்க காலத்தில் முருகனோடு தொடர்புடையதாக இவ்வெறியாடல் திகழ்ந்தது. முருகனுக்குரிய வேலினைக் கையில் ஏந்தி ஆடினோன். வேலன் எனப்பட்டான் வேலனின் வெறியாடல் பற்றி அகப்பாடல்களே கூறுகின்றன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னே வெறியாட்டுப் பெருவழக்காக இருந்தது என்பதை,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட் டயர்ந்த காந்தளும்"

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம் (Thamizhannal, 2010).

இவ்வெறியாடல் அகவாழ்விலும் பெரிதும் நிகழ்த்தப்பட்டதே பதினெண் கீழ்க்கணக்கு அகநூல்கள் எடுத்துரைக்கின்றன.

தலைவன் தலைவி இருவரும் உடன்போக்குச் சென்ற நிலையில் வேலனைப் போல் வெறியாட்டு எடுக்கும் பெண் மகளான தேவராட்டியிடம் நற்றாய் வினவுகிறாள்.

"வேறாக நின்னை வினவுவேன் தெய்வத்தால்

கூறாயோ கூறுங் குணத்தினனாய் - வேறாக

என்னைக்(கு) ஏறக் கொணருமோ வெளவளையைத்

தன் மனைக்கே உய்க்குமா தான்"

இதில் தன் மகள் தம் மனைக்கு வருவாளா அல்லது தலைவன் மனைக்கு கூட்டிச் செல்வானா என்று தெய்வத்திடம் கேட்டு உரைக்குமாறு வேண்டுகிறாள். தெய்வமேரிய தேவராட்டி எதிர்காலத்தில் நடக்கப்போவதைச் சரியாக உரைப்பாள் என்னும் நம்பிக்கை இருந்ததை இதன் வழி அறிய முடியும்.

தலைவனுடன் கொண்ட தொடர்பினால் தலைவியின் மேனி வேறுபடுகிறது. இதை அறியாத பெற்றோர் வேலனைக் கொண்டு வெறியாடுதலைச் செய்ய முற்பட்டதை

"வெறிகமழ் வெற்பன் என் மெய்ந்நீர்மை கொண்ட(து)

அறியாள்மற்(று) அன்னோ அணங்(கு) அணங்கிற்

மறியீர்த்(து) உதிரம் தூய் வேலன் தரீ இ றென்(று)

வெறியோ(டு) அமம்வரும் யாய்"

என்னும் பாடல் புலபடுத்தும். அவ்வாறு வெறியாடும் பொருட்டு வேலைக் கொண்டு ஆடம் வேலன் ஆட்டுக்குட்டியை முருகனுக்குப் பலியாகக் கொடுத்து வழிபடுவதை

"ஆர்வத்தின் ஆர முயங்கினேன் வேலனும்

ஈர வலித்தான் மறி"

என்னும் பாடலடிகள் உரைக்கும். இதனால் தலைவி உற்ற நோயைத் தீர்ப்பதற்காக வெறியாட்டை நிகழ்த்தினர் என்பதை அறியமுடிகிறது. இதன் வழி வெறியாட்டு வழிபாடு சார்ந்த நம்பிக்கையாக உருப்பெற்றுள்ளமை புலனாகும்.

## பேய் பற்றிய நம்பிக்கைகள்

பேய் பற்றிய எண்ணம் பன்னெடுங்காலமாகவே மக்களிடம் இருந்து வருகிறது. இறந்தவர்களின் ஆன்மா ஆவியாக வருவதாக நம்புகின்றனர். இந்நம்பிக்கையை ஐந்திணை ஐம்பதில் உள்ள,

"கொடுவில் எயினர்தம் கொல்படையால் வீழ்ந்த

தடிநிண மாந்திய பேஎய் - நடுகல்

விரிநிழல் கண்படுக்கும் வெங்கானம் என்பர்'

பொருள் புரிந்தார் போயசுரம்"

என்னும் பாடல் விளக்கும் தலைவன், தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் சென்ற பாலைநில வழியானது. தரையையும் கொழுப்பையும் தின்ற பேய்கள் போரிலே மடிந்தாருக்கு எடுக்கப்பட்ட நடுகல்லின் நிழலில் துயிலும் இயல்பு சுட்டப்பட்டுள்ளது. இதில் பேய் பற்றிய நம்பிக்கை இடம்பெற்றுள்ளது.

## முடிவுரை

பழந்தமிழர் தம் வாழ்வில் பல்வேறு பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை கைக்கொண்டிருந்தனர். கார்த்திகை தீபம் ஏற்றல், விளையாட்டு, கூடல் இழைத்தல், கண்துடித்தல், பல்லியின் ஒலி கேட்டல், நல்லநாள் பார்த்தல், வெறியாட்டு எடுத்தல் என்பன போன்ற பல மக்கள் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் கொண்டிருந்தமையைப் பதினெண்கீழ்க்கணக்கு அகநூல்கள்

புலப்படுத்துகின்றன. அகவாழ்வை களவு, கற்பு என்னும் இரு நிலைகளிலும் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் இருந்துள்ளன. இந்நம்பிக்கைகளில் பல இன்னும் மக்களால் வழக்கில் பின்பற்றப்பெறுதல் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் பண்பாட்டில் பெற்ற இடத்தைப் புலப்படுததுகின்றன.

## References

Gandhi, K. (2008) Tamilar Palakka Valakangalum Nambikaikalum, International Institute of Tamil Studies, Chennai, India

Rasamanikkanar, M. (2008) Tamilar Varalarum Panpadum, Gowra Publications, Chennai, India

Sanmugam Pillai, M. (2008) Sanga Tamilar Valviyal, International Institute of Tamil Studies, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License